**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 74/2021 | Date | : 02.01.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.1 | Taluk | : |
| Name | : **கிருஷ்ணராஜ்** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.01.2026

(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் குமிளம்பரப்பு சித்தோட்டில் குடியிருந்து கைத்தறி நெசவு ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் வீட்டிற்கு வந்து நானும் எனது மனைவி மல்லிகா மற்றும் எனது இளைய மகன் சென்ராய ராஜா ஆகியோர் சாப்பிட்டுவிட்டு மதியம் 02:30 மணிக்கு வீட்டிலிருந்து கடைக்கு கிளம்பினோம். மதியம் 02.45 லிருந்து 03.00 மணி இருக்கும் எங்கள் வீட்டிற்கு பின்புற வீட்டில் குடியிருக்கும் பிரகாஷ் என்பவர் எனக்கு போன் செய்து எங்களது வீட்டில் இருந்து டிவியை ஒரு நபர் எடுத்துச் செல்வதாகவும் சொன்னார்.

2. உடனே நாங்கள் மூவரும் வீட்டிற்கு புறப்பட்டு வந்தபோது முன்புறம் இருந்த கிரில் கேட் திறந்திருந்தது. வீட்டின் மரக்கதவு பூட்டு நெம்பப்பட்டு திறந்திருந்தது. வீட்டினுள் நாங்கள் சென்று பார்த்த போது, தெற்கு புறம் இருந்த பெட்ரூமில் இருந்த பீரோ திறந்திருந்தது. லாக்கர் உடைந்திருந்தது. வெளியே கட்டிலின் மேல் துணிமணிகள் சிதறி கிடந்தன. நகை பெட்டியும் சிதறி கிடந்தன.

3. நகை பெட்டியில் இருந்த ஒரு நெக்லஸ், ஒரு சிவப்பு கல் வைத்த டாலர், ஒரு செயின், ஒரு வளையல், ஒரு தங்கத்தோடு மொத்தம் சுமார் ஏழரைப் பவுன் எடையுள்ள தங்க நகைகள் காணாமல் போய் இருந்தன. ஒரு வெள்ளி தட்டையும் காணவில்லை யாரோ அவற்றை திருடி சென்றது தெரியவந்தது. மறுநாள் 04.00 மணி அளவில் தான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னுடைய வீட்டிற்கு வந்து பார்வையிட்டார்கள்.

4. பின்பு ஒரு வருடம் கழித்து எனக்கு போன் செய்து என் வீட்டில் களவு போன நகையையும் அதை திருடியவர்களை பிடித்து விட்டதாகவும், எங்களுடைய நகையை வந்து அடையாளம் காட்டுமாறும், காவல் நிலையத்துக்கு வருமாறும் சொன்னார்கள். நானும் எனது மனைவி மற்றும் எனது மகன் சென்ராயராஜா ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு சென்றோம். எங்களது நகைகளை அங்கு அடையாளம் காட்டினோம். பின்பு நகைகளை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச் சென்று விட்டோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகைப்படங்களில் உள்ள நகைகள் எங்களுடையது தான். **(புகைப்படங்கள் (எண்ணிக்கை – 7) அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.01.02 17:19:26 -0800

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 74/2021 | Date | : 02.01.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.2 | Taluk | : |
| Name | : **மல்லிகா** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.01.2026

(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317—ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் குமிளம்பரப்பு சித்தோட்டில் குடியிருந்து கைத்தறி நெசவு ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2019ம் வருடம் தீபாவளிக்கு மறுநாள் மதியம் வீட்டிற்கு வந்து நானும் எனது கணவர் ஆகியோர் சாப்பிட்டுவிட்டு மதியம் 02:30 மணிக்கு வீட்டிலிருந்து கடைக்கு கிளம்பினோம். எனது மகன் சென்ராயராஜா வீட்டில் இருந்தார். ஒரு பெரியகாரியம் ஆனதால் எனது மகனுக்கு போன் செய்து அவரை கடைக்கு வரச்சொன்னோம். அதற்குள் மதியம் 03.00 லிருந்து 03.30 மணி இருக்கும் எங்கள் வீட்டிற்கு பின்புற வீட்டில் குடியிருக்கும் பிரகாஷ் என்பவர் எனது கணவருக்கு போன் செய்து எங்களது வீட்டில் இருந்து டிவியை ஒரு நபர் எடுத்துச் செல்வதாகவும், அவர் அதை பார்த்தாகவும் சொன்னார்.

2. உடனே நாங்கள் மூவரும் வீட்டிற்கு புறப்பட்டு வந்தபோது முன்புறம் இருந்த கிரில் கேட் பூட்டப்பட்டிருந்தது. வீட்டின் மரக்கதவு பூட்டு நெம்பப்பட்டு திறந்திருந்தது. வீட்டினுள் நாங்கள் சென்று பார்த்த போது, தெற்கு புறம் இருந்த

பெட்ரூமில் இருந்த பீரோ திறந்திருந்தது. லாக்கர் உடைந்திருந்தது. வெளியே கட்டிலின் மேல் துணிமணிகள் சிதறி கிடந்தன. நகை பெட்டியும் சிதறி கிடந்தன.

3. நகை பெட்டியில் இருந்த ஒரு நெக்லஸ், ஒரு அரைபவுன் தங்க காயின், இரண்டு செட் தோடு, ஒரு ஜிமிக்கி – முக்கால் பவுன், ஒரு தங்கவளையல், ஒரு சிவப்பு கல் வைத்த டாலர் மொத்தம் சுமார் ஏழரைப் பவுன் எடையுள்ள தங்க நகைகள் காணாமல் போய் இருந்தன. ஒரு வெள்ளி தட்டு மற்றும் டிவியும் காணவில்லை. யாரோ அவற்றை திருடி சென்றது தெரியவந்தது. எனது கணவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்.

4. பின்பு ஒரு வருடம் கழித்து போலீசார் எனது கணவருக்கு போன் செய்து என் வீட்டில் களவு போன நகைகளையும், அதை திருடியவர்களையும் பிடித்து விட்டதாகவும் எங்களுடைய நகையை வந்து அடையாளம் காட்டுமாறும், காவல் நிலையத்துக்கு வருமாறும் சொன்னார்கள். நானும் எனது கணவர் மற்றும் எனது மகன் சென்ராயராஜா ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு சென்றோம். எங்களது நகைகளை அங்கு அடையாளம் காட்டினோம். பின்பு நகைகளை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச் சென்று விட்டோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகைப்படங்களில் உள்ள நகைகள் எங்களுடையது தான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.01.02 17:19:34 -0800

Judicial Magistrate No.III,

Erode.